**ஜூலை – 06**


# TNPSC துளிகள்

- மறைமுக வரிக்கான திட்டம் வகுக்கும் உச்சி அமைப்பான மறைமுக வரிகள் மற்றும் சுங்கத்திற்கான மத்தியக் குழுவிற்கு (CBIC - Central Board of Indirect Taxes and Customs) தலைவராக மூத்த அதிகாரியான எஸ்.ரமேஷை மத்திய அரசு நியமித்துள்ளது. இவர் மத்திய அரசுக்குச் சிறப்புச் செயலாளர் அந்தஸ்துடன் சிபிஐசி யின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.
  - இதற்கு முன் சிபிஐசி-ன் தலைவராக வனஜா என் சர்னா பதவி வகித்தார். அவர் சமீபத்தில் ஓய்வு பெற்ற பின் இப்பதவிக்கு எஸ்.ரமேஷ் நியமிக்கப்பட்டுள்ளார்.
- இன்பிபீம் (Infibeam) அவின்யூவில் இயக்குநராக இருக்கும் விஸ்வாஸ் பட்டேல் இந்தியாவின் பணம் செலுத்துதல் ஆணையத்தின் புதிய தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். இப்பதவி வகித்த நவீன் சூர்யா ஏமிரைட்ஸின் தலைவராக நியமனம் செய்யப்பட்டுள்ளார்.
- 5வது பிராந்திய பொருளாதாரக் கூட்டு ஒப்பந்தத்தின் (RCEP - Regional Comprehensive Economic Partnership) அமைச்சர்களுக்கிடையேயான தற்காலிக கூட்டத்தொடர் ஜப்பானின் டோக்கியோவில் நடைபெற்றது. ஆசியான் நாடுகளுக்கு வெளியே நடைபெறும் முதலாவது சந்திப்பு இதுவாகும்.
  - சிங்கப்பூரின் வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சரான சன் சுன் சிங் மற்றும் அவரது எதிரிணையில் ஜப்பானின் ஹிரோசிகி சிகோ ஆகியோர் தலைமையில் நடைபெற்றது.
- கோழிக்கோடு மற்றும் மலப்புரம் ஆகிய மாவட்டங்கள் நிபா வைரஸ் தொற்று நோயற்ற மாவட்டங்களாக கேரளா அரசு அறிவித்துள்ளது. இது இரட்டை நோயரும்பு காலம் முடிவடையும் வரை நிபா தொற்று நோய் எதுவும் பதிவாகாததால் இந்த இரு மாவட்டங்களும் தற்காலிகமாக நிபா வைரஸ் தொற்று நோயற்ற மாவட்டங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன.

# தேசியச் செய்திகள்

## டிஎன்ஏ தொழில்நுட்ப ஒழுங்குபடுத்துதல் மசோதா, 2018

- டிஎன்ஏ தொழில்நுட்ப ஒழுங்குபடுத்துதல் (உபயோகம் மற்றும் பயன்பாடு) மசோதா 2018 க்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
- குற்றவியல் விசாரணை மற்றும் நீதித் தீர்வுக்காகப் பயன்படுத்தப்படும் டிஎன்ஏ, தேர்ந்தெடுக்கப்பட்ட நபர்களிடம் இருந்து பெறப்படும் மரபணுத் தகவல்களை சேகரித்து வைக்க அனுமதித்தல் மற்றும் அந்தத் தகவல்களை வைத்து தவறாக பயன்படுத்துவதைத் தடுப்பதற்கான பாதுகாப்பு வசதி ஆகியவற்றை ஒழுங்குபடுத்துதல் இம்மசோதாவின் முதன்மை நோக்கங்களாகும்.




❖ இம்மசோதா நாட்டின் பல்வேறு பகுதிகளில் காணாமல் போன பதிவு செய்யப்பட்ட மற்றும் அடையாளம் தெரியாத இறந்த உடல்களை மற்றவர்களுடன் பொருந்திப் பார்த்து அடையாளம் காண வழி செய்யும்.

## புலம்பெயர்ந்தவர் மற்றும் தாய்நாடு திரும்பியவர்களின் நிவாரணம் மற்றும் மறுவாழ்வு

❖ புலம்பெயர்ந்தவர் மற்றும் தாய்நாடு திரும்பியவர்களின் நிவாரணம் மற்றும் மறுவாழ்வுக்கான ஒரே குடையின் கீழ் அமைந்த திட்டங்களுக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

❖ புலம் பெயர்ந்தவர் மற்றும் நாடு திரும்பியவர்களின் நிவாரணம் மற்றும் மறுவாழ்வுக்காக ஏற்கெனவே மத்திய உள்துறை அமைச்சகத்தால் செயல்படுத்தப்படும் திட்டங்கள் மார்ச் 2020 வரை தொடர மத்திய அமைச்சரவை

ஒப்புதல் வழங்கியுள்ளது.

- பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீர் பகுதியிலிருந்து இடம்பெயர்ந்த குடும்பங்கள், இலங்கை அகதிகள், திரிபுராவில் உள்ள அகதிகள் முகாமில் தங்கியுள்ள குடும்பங்கள், 1984ஆம் ஆண்டு நடைபெற்ற சீக்கிய கலவரத்தின் போது பாதிக்கப்பட்டவர்கள், பயங்கரவாத தாக்குதலின் போது பாதிக்கப்பட்ட பொதுமக்கள், மதவாத மற்றும் மாவோயிஸ்ட் வன்முறையின் போது பாதிக்கப்பட்டவர்கள் ஆகியோர் இத்திட்டத்தின் மூலம் பயன் பெறுவர்.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச்செய்திகள்

## சிவிஜில் கைபேசி செயலி

- குடிமக்களுக்காக தேர்தலின் போது எந்த ஒரு நடத்தை விதிமீறல் பற்றியும் புகார் அளிக்க தேர்தல் ஆணையம் சிவிஜில் எனும் கைபேசி செயலியைத் தொடங்கியுள்ளது.
- இதன் நோக்கம் அரசியல் கட்சிகள் செய்யும் தவறுகளை ஆதாரத்துடன் பகிரவும், அவர்களின் வேட்பாளர்கள் மற்றும் ஆர்வலர்களின் நடத்தை மீறல்களை நேரடியாக இந்தியத் தேர்தல் ஆணையத்திடம் புகார் அளிக்கவும் மக்களிடம் அதிகாரம் அளிக்க எண்ணுகிறது.
- தற்பொழுது பீட்டா பதிப்பு வெளியிடப்பட்டுள்ளது. சத்தீஸ்கர், மத்தியப் பிரதேசம், மிசோரம் மற்றும் இராஜஸ்தான் ஆகிய மாநிலங்களில் நடைபெற இருக்கும் சட்டப்பேரவைத் தேர்தல்களில் இது பயன்படுத்தப்படும்.
- எந்தெந்த மாநிலங்களில் தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ளதோ அந்த மாநிலங்களில் மட்டும் இச்செயலி செயல்படும்.

## KVIC - e-சந்தைப்படுத்துதல் அமைப்பு அறிமுகம்

- புது தில்லியில் காதி நிறுவன மேலாண்மை மற்றும் தகவல் அமைப்பு (KIMIS - Khadi Institution Management and Information System) என்ற பெயரில் ஒற்றைக் குடை இ-சந்தைப்படுத்துதல் அமைப்பை காதி மற்றும் கிராமப்புற தொழிற்சாலைகள் ஆணையம் (KVIC - Khadi and Village Industries Commission) தமது சொந்த தயாரிப்பில் அறிமுகப்படுத்தியது.
- இந்தியாவில் எந்த இடத்திலிருந்தும் விற்பனை மற்றும் கொள்முதல் ஆகியவற்றை 24 மணி நேரமும் கண்காணிப்பது இந்த சொந்த தயாரிப்பான ஒற்றைக் குடை கணக்கிடும் மென்பொருளின் பணியாகும்.
- இது KVIC தகவல் தொழில்நுட்ப குழுவால் வடிவமைக்கப்பட்டது.

# மாநிலச் செய்திகள்

## கட்டாய போதை மருந்து பரிசோதனை

- பஞ்சாபில் காவல்துறை அதிகாரிகள் உள்பட அனைத்து அரசு ஊழியர்களுக்கும் கட்டாய போதை மருந்து பரிசோதனைக்கு அம்மாநில முதல்வர் கேப்டன் அமரிந்தர் சிங் உத்தரவிட்டுள்ளார்.



- அரசாங்கப் பணியில் அனைத்து விதமான பணிநியமனம் மற்றும் பதவி உயர்வு ஆகியவற்றிற்கு போதை மருந்து பரிசோதனை கட்டாயம் மேற்கொள்ள வேண்டும் என்று பஞ்சாப் முதல்வர் உத்தரவிட்டுள்ளார். அதே போல் குறிப்பிட்ட பணியாளர்கள் பணியின் தன்மையைப் பொறுத்து ஆண்டுதோறும் மருத்துவ பரிசோதனை செய்ய வேண்டும் என்று உத்தரவிட்டுள்ளார்.

## Genome Valley 2.0

- தெலுங்கானா மாநில அரசானது ஜுனோம் வேலி 2.0 (Genome Valley 2.0) என்ற திட்டத்தை வகுப்பதற்காக சிங்கப்பூரை மையமாகக் கொண்ட பொறியியல் மற்றும் ஆலோசனை வழங்கும் நிறுவனமான சுர்பானா ஜுரோங்குடன் (Surbana jurong) புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றில் கையெழுத்திட்டுள்ளது.
- ஆசியாவில் ஜுனோம் Valley 2.0 என்பது வாழ்க்கை அறிவியல் பற்றிய ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நடவடிக்கைகள் மற்றும் மிகப்பெரிய வாழ்க்கை அறிவியல் இலக்குக்காக இந்தியாவின் முதல் ஒழுங்கமைக்கப்பட்ட பார்மா உயிரணுத் திரள் (Clutes) ஆகும்.
- இந்தியாவின் ஹைதராபாத்தின் சமிர்பேட்டில் 1999-ல் இந்தத் திரள் கருத்தாக்கம் பெற்றது. இது உலக அளவில் பெருமையாக பேசக்கூடிய கட்டமைப்பு வசதிகள் கொண்ட, இந்தியாவின் முதலாவது முறையாக வளர்ச்சி பெற்ற ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சித் திரளாகும்.
- Genome valley 2.0 என்பது தன்னிறைவு பெற்ற வாழ்க்கை அறிவியல் சூழல் அமைப்பில் திரள்களை உலகத் தரத்திலான அறிவை வழிநடத்தும் ஒருங்கிணைந்த நடைபாதைக்கு மேம்படுத்தலுக்கான தொலைநோக்குப் பார்வையாகும்.

# பிரபலமானவர்கள் , விருதுகள் மற்றும் நிகழ்வுகள்

## ஏஞ்சலா போன்ஸ் - பிரபஞ்ச அழகி (Miss Universe)

- ‘மிஸ் யுனிவர்ஸ் ஸ்பெயின்’ பட்டத்தை வெல்லவிருக்கும் முதல் திருநங்கை என்னும்

பெருமையை ஏஞ்சலா போன்ஸ் பெற்றுள்ளார்.

- மேலும் 2018-ல் நடைபெறும் பிற நாட்டினருக்கான மிஸ் யுனிவர்ஸ் அணிவகுப்பிலும் போட்டியிட உள்ளார்.



- மிஸ் யுனிவர்ஸ் அமைப்பானது திருநங்கைகள் போட்டியில் பங்கு பெறுவதற்கு விதிக்கப்பட்ட தடைக்கு முடிவுகட்டிய ஆறு ஆண்டுகளுக்குப் பிறகு தற்பொழுது போன்ஸின் வெற்றி நிகழ்ந்துள்ளது.

- - - - - - - - - - - - - -